பக்ஷிராஜாவின்

கன்னிகா

பக்ஷிராஜா ஸ்டுடியோஸ்

நடிகர்கள்.

டி. இ. வரதன், B. Sc., ... குமரன்
டி. பாலசுப்ரமண்யம் .... பளிஞன்
என். எஸ். கிருஷ்ணன் .... வீரன்
காளி. என். ரத்னம் .... பூசாரி
பி. ராஜகோபால ஐயர் .... சிவன்
கே. ராமு .... விஷ்ணு
ஏ. வி. நடராஜன் .... பிரம்மா
நரசிம்மன் .... நாரதர்
என். எஸ். நாராயண பிள்ளை .... சேனாதிபதி
ஏழுமலை .... பூசாரி சிஷ்யன்
எம். எஸ். ஸரோஜனி .... மாலினி
ஹேம மாலினி .... பால மாலினி
எம். ஆர். சந்தானலக்ஷ்மி .... கன்னிகா
ஹரிணி .... பால கன்னிகா
டி. ஏ. மதுரம் .... பிரபாவதி
லலிதா - பத்மினி .... சிவ-மோஹினி

கதை, வசனம் .... இளங்கோவன்
பாட்டு, ஸங்கீதம் .... பாபநாசம் சிவன்
நடனம் .... வி. பி. ராமய்யா பிள்ளை

டைரக்ஷன் : எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு

கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோஸ் தயாரித்தது.

நாராயணன் கம்பெனி வெளியீடு.

All Rights Reserved] [விலை 1½ அணா

கன்னிகா

கதைச்சுருக்கம்.

பூலோகத்தில் தனக்கு சிரஞ்சீவிப்பதவி சித்திக்கும் என்ற மூட நம்பிக்கை கொண்ட கொடுங்கோல் மன்னன், பளிஞன், கன்னிப் பெண்களைக் காளிக்குப் பலியிட்டு வருகிறான். அவனது மனைவி விலாஸனியும், மகள் மாலினியும் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், கன்னிகா என்னும் ஓர் ஏழைச்சிறுமியைக் காளிக்குப் பலியிட ஏற்பாடுசெய்கிறான். அச்சமயம் நாரதர் தோன்றி, கன்னிகாவைக் காப்பாற்றி, சிவன் நாமத்தைக் கூறிக்கொண்டிருக்கும்படி உபதேசித்து, மறைகிறார். கன்னிகா சிவபெருமானைக் குறித்து தவம் செய்கிறாள்.

பளிஞனின் கொடூரச் செயல்களால் உலகமே அழிந்துவிடும் என்ற நம்பிக்கை கொண்ட நாரதர், அவனை ஒழித்துவிடுவதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார். இந்திரனுடைய பூஜைக்கு மலர்கொய்ய வந்த திலோத்தமை பளிஞனால் சிறையிடப்பட்டு, அவனது சபையில் நடனமாடுகிறாள். நாரதர் பிரம்மாவைச் சந்தித்து, பளிஞன் திலோத்தமையைச் சிறைப்படுத்தியதால் இந்திரன் கடுங்கோபம் கொண்டிருப்பதையும், பளிஞனுக்கு நேரிடப்போகும் பேராபத்தையும் கூறுகிறார். தனது பக்தனான பளிஞனைக் காப்பதற்காக சிவபெருமானிடம் செல்கிறார் பிரம்மா.

பார்வதி தேவியார், பரமசிவன்தான் வந்துவிட்டதாகக் கருதி பிரம்மாவிடம் உரையாடுகிறாள். தவறுதலை உணர்ந்து மனம் உருகுகிறாள். "தனக்கும் பிரம்மாவுக்கும் ஐந்து தலைகள் இருப்பதால்தான் அவ்வித அசம்பாவிதம் ஏற்பட்டது" என்று சினம்கொண்ட சிவபெருமான், பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து விடுகிறார். சகல லோகங்களும் நடுங்குகின்றன பிரம்மனின் அறுபட்டசிரம் சிவபெருமான் கரத்தில் ஒட்டிக்கொள்கிறது. பிடித்தது சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம். சிவபெருமான் பித்தனாகவும், பேயனாகவும் அலைந்து, பூலோகத்திற்கு வருகிறார். அவரைக் காப்பதன் பொருட்டு மஹாவிஷ்ணு மோஹினி ரூபம் கொண்டு அவரோடு நடனம் ஆடுகிறார். குண்டலம் கீழே விழுகிறது.

ஆடிக்கொண்டே அதை எடுத்து, சிவபெருமானுக்குத் தெரியாமல் காதில் அணிந்து கொள்கிறார். அதைக் கண்டு பிரம்மன் தலை சிரித்து கீழே விழுகிறது. சிவபெருமானுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்குகிறது. இதுசமயம் அவரது பாதம் பட்டு ஒரு புற்று சிதறுகிறது. அதிலிருந்து தவம் செய்துகொண்டிருந்த கன்னிகா தோன்றுகிறாள். அப்பொழுது நாரதரும் தோன்றுகிறார். பரமசிவன் ஒரு வாலிபனைச் சிருஷ்டித்து, அவனுக்கு 'குமரன்' என்று பெயரிட்டு, கன்னிகாவுக்குப் புத்திரனாக அளித்து, 'இவனால் பளிஞன் அழிவான்' என்று கூறி மறைகிறார்.

குமரன் சிருஷ்டியானதும், பளிஞனுக்கு அநேக துற்சகுனங்கள் ஏற்படுகின்றன. தன் மந்திர சக்தியால் குமரனைக் காண்கிறான். பூதத்தை ஏவி, அது அவனை அழித்துவிட்டதாக பகற்கனவு காண்கிறான். குமரனோ, பளிஞனது ராஜ்யத்திற்குச் சென்று, அங்கு பளிஞன் மீது பக்தி கொண்டிருந்த ஜனங்களுக்கு கடவுள் மீது பக்தி உண்டாகும்படி செய்கிறான், காளிக்கு உயிர்ப்பலியிடுவதைத்தடுக்கிறான். நச்சுப் பொய்கையை நல்ல தண்ணீர்க் குளமாக்குகிறான். அங்கு வசித்துவந்த பூதத்திடம் திரவியம் பெற்று அதை அந்நாட்டு மக்களுக்கு விநியோகிக்கிறான். நற்புகழ் பெற்று விளங்கும் குமரனைப்பற்றி கேள்விப்பட்ட பளிஞன், அவனைக் கொன்றுவிட தானே செல்கிறான். பளிஞனின் மகளாகிய மாலினியோ, குமரனின் நற்செய்கைகளைக் கேள்விப்பட்டு, அவன் மீது காதல் கொண்டு, முன்னரே சென்று குமரனை எச்சரிக்கிறாள். மாலினியை இன்னாரென்று அறிந்த குமரன், அவளது நற்குணத்தைக் கண்டு அவளைக் காதலித்து காந்தர்வமணம் செய்கிறான். மாலினியின் மூலம் பளிஞனின் உயிர்நிலை ஏழு கடல்களுக்கு அப்பாலுள்ள ஒரு புறாவின் உருவத்தில் இருப்பதைத் தெரிந்து அதைக் கைப்பற்றுகிறான்.

பளிஞன், மாலினியையும, கன்னிகாவையும கபடமாய் தன் அரண்மனைக்கு அழைத்து வந்து அவர்களைக் காளிக்குப் பலியிட ஏற்பாடு செய்கிறான். குமரனை வரவழைப்பதற்காக பிரம்மயாகம் செய்கிறான். யாகசாலையில் குமரன் தோன்றி, யாகத்தைக் கலைத்து, பளிஞனைக் கொல்கிறான். அவ்வமயம் தேவர்கள் தோன்றி ஆசி கூறுகின்றனர்

சுபம்!

பாட்டுகள்.

1. மாலினி :

ராகம் : நாட்டை] [கண்டஜாதி அட தாளம்

நடனம் ஆடினர், வெகு நாகரீகமாகவே
கனக சபையில் ஆனந்த (நடனம்)

ஆரபி]

வடகைலேயில் முன்னாள் மாமுனிக்கருள்
செய்தபடி தவறாமல் தில்லைப்பதியில்வந்து
தைமாசத்தில் குருபூசத்தில் பகல்நேரத்தில்

ஜதி

தாம்தகிடதகஜம் தகணம் தரிகும்தரி
தீம் திருத தினனம் தரினம் தரிகும்தரி
ததினு திமித தித்தாம் தித்தாம் தித்
தாகத தஜ்ஜெணு தணந்த டிங்டங்குத
தெய்ய தெய்ய ததிமி தகிடதக தகத
ஜொணுததக தக்கிட கிடதாம் திக்கிட
கிடதை தத்தோம் என்று (நட)



மத்தியமாவதி]

அஷ்டதிசையும் கிடு கிடுங்க
சேஷன் தலை நடுங்க அண்டமதிர
கங்கை துளி சிதற பொன்னுடரும்
கொண்டாட
இஷ்டமுடனே கோபாலகிருஷ்ணன் பாட
சடை ஆட அரவுபட மாட அதின்
வடமாட தொம் தோமென்று பதவி
தந்தோம் என்று(ஷை ஜதி மறுமுறைபாடுதல்)

2. மாலினி :

ராகம் : ஸாரமதி] [ஆதி தாளம்

எனது மனம் துடிக்குதே—கணபதே
யார் துணை உனையல்லால்—இது தருணம் (எனது)
உனது கருணைத் துளியால்—விரைவினில்
ஒரு பாவமறியா இப்பேதையைக் காத்தருள் (எனது)
என்போல் இவளோர் சிறு பெண்பாவை
என்ன பிழை செய்தாள் பொன்னடி பணிவோர்க்கு
இன்பம் தரும் ஆதி தெய்வமே
இரக்கமில்லாத என் தந்தை செயல் கண்டு (எனது)

3. கன்னிகா :

ராகம் : ஹரிகாம்போதி

[ஆதி தாளம்

மனம் கனிந்திந்த வரம்தா—ஜெகன்
மாதா ! காளா ! மனமிருநதால்—திரு
(மனம்)

மாதர்டம ஆடவர்கள் அன்புமுயர்
மதிப்பும் வைக்க வேண்டும்—நற்குல

மாதரும உயிரிழந்தாலும் கற்பின்
வழுவாதிருக்க வேண்டும்
மாந்தர்கள் கொடும் விலங்குகள் ஆகாமல்
பகுத்தறிவில் மிளிர வேண்டும்—உலகெங்கும்
மங்களமுடன் சாந்தமும் பெருக
அஹிம்சை ஓங்க வேண்டும்—மாதா (மனம்)

4. நாரதர் :

ராகம்: பிஹாக்] [ஆதி தாளம்

நாராயண ஹரி நாராயண ஹரி
நாராயண ஹரே ராம் ராம் ராம்
க்ஷீராப்தி சயன கம்பீராஹரே
ஸ்ரீகாம் ததின மந்தாராப்ரபோ
தேவாதி தேவா முராரே ஜகதீச தயாளோ சௌரே
(ஹரி நாராயண)

ஸ்ரீ வைகுண்ட வாஸா கௌஸ்துப
சங்க சக்ர பூஷா மங்களகர
மந்தஹாஸா துஷ்டஜன கால
ஸ்ரீனிவாஸா ஜே ஹரே (நாராயண)

5. மாலினி :

ராகம் : ஸரஸ்வதி]

[ஆதி தாளம்

யானை முகனே கருணை
கரனே—திரு
அருள்புரி ஐங்கரனே —
— — திரு
அருள்புரி ஐங்கரனே
மதம் பொழியும்
(யானை)

இருள் மயமாம் புவி வாழ்வினிலே—உன
திணையடியலதொரு துணையறியேன்—திரு (அருள்)

ஓம்கார ரூபா கண நாயகா
உமை மகிழ் மகனே விநாயகா
நீங்கா தெனது நெஞ்ச ஆலயத்திலே
நீ என்றும் துணை நின்று இன்பம் தந்தே திரு (அருள்)

6. குமரன் :

ராகம்: கல்யாணி] [ஆதி தாளம்

ஸுந்த ரேஸ்வரனே-சுபகர—க்ருபா
கடாக்ஷம் வைத்தெம்மை—யாண்டருள் (ஸுந்)

சந்த்ரசேகர சங்கரா திரு
ஆலவாயமர் ஸ்ரீமீனாக்ஷி. (ஸுந்)

பண்சுமந்த பாணர்போல்—விறகுடன்
மண்சுமந்த திருமுடியழகா
பெண்செய்பிட்டு விரும்பி மாறன் பிரம்படி
புண்சுமந்த மேனியனே மாமதுரை (ஸுந்த)

7. குமரன் :

ராகம் : நவரோஸ்] [ஆதி தாளம்

எங்கும் நிறைந்திருக்கும் என்தெய்வம்
எலலாம் அறிந்திருக்கும்

பொங்கிவரும் கருணை மழைபொழியும்
பொய்யறியா மனத்தில்

தங்கி மகிழ்ந்திருப்பான் தயாளன்
தனக்கொரு பயன் கருதான்

மங்களமே தருவான் அடியவர்
மனம்நினை வடிவம்கொள்வான்

வாரீர் அவன்தாள் புகழ்ந்து பாடவே ஒன்று
சேரீர் சதானந்த வாழ்வு கூடவே.

8. குமரன் : (விருத்தம்)

ராகம்: பியாகடை]

ஊண்நாடிக்கொடிய விலங்குகள்போல்
உயிர்களைக் கொன்றுண்பார்-நெஞ்சில்
நாணமிலார் உயர் மனிதப்பிறப்படைந்தும்
கருணையில்லார் ஞானமில்லார்.

ராகம்: வராளி]

ஆணவத்தால் அவர் செய்யும் கொடுமையும்
உன் சம்மதமோ அறமோ தாயே
வீணே உன் பெயர் சொல்லி உயிர் வதைத்தல்
விளையாட்டோ விதியோ தேவி.

9. மாலினி :

ராகம் : ஷண்முகப்ரியா] [திஸ்ர ஏகம்

என்ன ஆனந்தம்பார் இயற்கையெனும்
தாயின் தனிமையில் (என்ன)

தன்னை மறந்திறைவன் பெருமையைப்
பாடும் பறவைகள் மதுரகீதம் (என்ன

ராகம் : பிலஹரி]

ஆடுவோம்வாரீர் விளையாடுவோம்
வாரீர் (ஆ)

பொன்னிறவானத்திலேதவழ்ந்தாடும்
குழந்தைகள் போல்

வெண்ணிறமும் கலந்த கருமுகில்
பந்தியும் கண் கவரும்

மாலைப் பொழுதின் ஏகாந்தம் இதில்
என்று மறியாத சாந்தம்-கூடி
(ஆடுவோம்)

10. மாலினி :

ராகம்: தோடி] [ஆதி தாளம்

யாரோ வந்தென்னிரு கண்பொத்தினர்
அன்புடன் கைப்பற்றினர்—கனவிலே (யாரோ)

ஊரேது பேரேதென்றறியேன் ஒரு நொடியில்
உள்ளத்தைக் கொள்ளை கொண்டார் மெல்ல நகைத்து
(யாரோ)

திரும்பத் திரும்ப முத்தம் சொரிந்தார்-காதல்
அரும்பும் சல்லாபங்கள் புரிந்தார்-அந்த
ஏகாந்த இன்பக் கனவு நிலையை நினைந்து
பாகாயுருகும் உள்ளம் யாருடன் சொல்வேன்

ராகம் : குந்தலவராளி

குமரன் — நான் இல்லையா?-சொல்லலாகாதா
மானோடு மானன்றி-யார் பேசுவார்

மாலினி — மானினத்தில் இதுபோல் கண்டறியேன்
மனிதமான், ஆண்மான், புமான்

குமரன் — மானோ மீனோ உன்விழி கருவண்டோ-நான்
மானாக வந்ததிலோர் தவறுண்டோ

மாலினி — நான் செய்த தவமிந்த மானாக வந்தது
நழுவப் பார்த்தால் விடுவேனோ

குமரன் — நழுவவென்றிங்கு வருவேனோ

11. குமரன் :

ராகம் : பைரவி [ஆதி தாளம்

பல்லவி

தாயே பைரவியே-மாமாயே
தயாபரி கௌரி சங்கரி (தாயே)

அநுபல்லவி

நீ என் குலதெய்வம் வந்தாதரி
நின்பதம் நம்பினேன் நாரணன்
சோதரி (தாயே)

சரணம்

தாரணியில் ஜெய மங்களமே
தரும்
பூரணி அம்பபவானி சராசர
காரணி காத்யாயனி கங்காநதி
நீரணி வேணியன் தேவி
மனோன்மணி (தாயே)

12. மாலினி—குமரன் :

(நடனம்)

ராகம் : வஸந்தா] [ஆதி தாளம்

நடராஜன் உன்திரு நடம்கண்டு
மையல் கொண்ட

கங்கையைக் கண்பாரய்யா-
ஸௌந்தர- (நடராஜன்)

அடிமலர் ஒன்றால் முயலகனைத்
தாக்கி

இடது பதம் தூக்கி
இளநகையுடன் ஆடும்

ஜதி

தாம்தீம் தகதஜெம் தகிடதக தீம்தாம் மகதம கிதகி மதகி தீம்த
தகதஜெம்தா தகதணம்தாதகதரும்தா-ததிமிண தொம் ஸமகம
ஜெணுதக தகிஸரிஸமாம - தத்தஜெம் - தகதஜெம் தகிடதிமி
தாமதாதகீதடீன் டிங்குதக - ததீம் தீம்தயென நடமாடும்
(நடராஜன்)

யாரும் தமக்கு நிகர் இல்லையென்றகங்காரம்
அடைந்து மதம் கொண்டு தெய்வம் மறந்த
தாருகவன தவ முனிவர் மனைவியர்
தனை மறந்தாடவைத்தாய் ஜகன் மோகன
(நடராஜன்)

13. மாலினி :

ராகம் : புன்னாகவராளி] [திஸ்ர ஏகம்

வெள்ளி மலைக்கரசே—பேதை
விண்ணப்பம் உன்னடிக்கே—ஏழை
உள்ளத்திலும் உறைவாய்—எந்தன்
உள்ளக்கிடை அறிவாய்—தாப (வெள்ளி)

ராகம் : செஞ்சுருட்டி]

இத்தரையில் அடியாள் — நினைத்த வரம் தருவாய்
உத்தம தெய்வமும் நீ—அருள் சித்தமிரங்குவயே
பக்தர்கள் போற்றும் பரஞ்சுடரே—உமை
பச்சைக் கொடிபடர் கல்பகமே—உயர் (வெள்ளி)

14. குமரன்

ராகம் : கானடா] [ஆதி தாளம

திக்குத் தெரியாத காட்டில்—வந்து
திகைக்க வைப்பதும் உந்தன் அருளோ—நின்
சித்த மிதோ மஹா தேவா எனக்
கார்கதி முக்கண்ணனே—இனி
ஏது செய்வேன்? அந்தோ—உன்
சோதனை போதாதோ,
மண்ணிலெனைப் படைத்தாய்—இதற்கோ
இத்தனை பாடு பட்டேன்
வெண்ணெ திரண்டிடும் போது—
அதன்
தாழி உடைந்தது போலானதே
என்னைத் துணையென நம்புமென்
கண்மணி
என்ன நினைப்பாளோ
உன்னைத் துணையென
நம்பினேனே—உடை
அம்மை மகிழ் மணாளா இங்கு
(ஏது செய்வேன்

15. நாரதர், குமரன், மாலினி : (விருத்தம்)

நாரதர் :

[ராகம் : சங்கராபரணம்

புவனேச சங்கராபரண மென்று அரவங்கள் பூண்
பவள வண்ணா

குமரன் :

[ராகம் : காமவர்த்தினி

தவளமதிசேகரா காமவர்த்தினி உமாதேவி ஒருபாகா
வரதா

மாலினி :

[ராகம் : காம்போதி

பவரோகமற மலர்ப்பத அன்பரைச் சுகாம்போதிதனில்
மூழ்கவைக்கும் சிவமஹா தேவ—சம்போ

மூவரும்]

[ராகம் : ஸ்ரீராகம்

சிவமஹா தேவ சம்போ ஸ்ரீராகப்ரியா—சதா (சிவ)
கைலைவாசனே உந்தன் சரணம்-சரணம்-சரணம் ஐயா!

சுபம்!

KANNIKA

Synopsis

King Paligna relentlessly pursues the sacrifice of Virgins at the altar of Kali Devi, with the foolish belief that therein lies the way to salvation, inspite of the remonstrations of his wife and daughter. The turn for the sacrifice comes in due course to a poor girl, by name, Kannika but her life is saved by the intervention of Sage Narada who takes Kannika to his hermitage.

Narada feels that the destruction of Paligna is necessary to preserve the world safe from his atrocities. He persuades Kannika to perform penance to Lord Siva and thus sows the seed for Paligna's end. Narada manouvres to rouse the wrath of Siva against Brahma. Siva, in great rage, goes to Brahmaloka and removes one of the heads of Brahma from his body, which gets affixed firmly to the hands of Siva, who thus commits the sin of Brahmahathi. In order to free Siva from that sin, Lord Vishnu dances before him in the form of Mohini, when accidentally, Siva happens to tread on an ant-hill out of which emerges Kannika still doing penance. Understanding the purpose of her penance, Siva creates a handsome youth blessing him as Kannika's son and adding that he will destroy Paligna and bring happiness to the world.

Kannika's son, Kumaran, blessed with superhuman powers by his divine origin, begins, an adventurous career doing immense good to the subjects of Paligna, and they all rejoice at the daring and valour of this youth and adore him. Paligna learns of this youth through his men and magic and tries to kill him by various means but with no success.

Fascinated with the growing popularity and prowess of Kumaran, Paligna's daughter, Malini, develops a spontaneous love for him. She goes to Kumaran, reveals her identity and warns him of danger from her father. Kumaran is struck with her charm and kind nature and falls in love with her. Kumaran and Malini are married and in one of her happiest moments, she discloses to him the secret of her father's life, and Kumaran gets at it against heavy odds.

Meantime Paligna imprisons Malini and Kannika by a ruse and performs Brahma Yaga to get at Kumaran, wherever he may be, with the intention of sacrificing in the fire all the three, Kannika, Malini and Kumaran. But there is a Divinity that shapes human ends. Kumaran does come to the Yaga, but with the life of Paligna in his grip in the form of a dove. The dove is killed and so is Paligna. The Gods appear on the scene and bless all the three.

Chakravarthy Press, Madras—MS. 320 for MS. 717—22-10-47—10,000

Pakshiraja's

KANNIKA